அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.





# நிதித்துறை

## மானியக் கோரிக்கை

எண்.16 - நிதித்துறை

எண்.50 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## அறிவிப்புகள்

## 2023 - 2024

# நிதித்துறை

## மானியக் கோரிக்கை

எண்.16 - நிதித்துறை

எண்.50 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## அறிவிப்புகள்

2023 – 2024


முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

## 1. இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி-புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்:

இத்திட்டத்தை பயனாளிகள் எளிதாக அணுகும் வகையில் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைவரின் பயன்பாட்டிற்காக திட்டத்தைப் பற்றிய முழுமையான தகவல்கள், நிலுவையிலுள்ள மருத்துவ சிகிச்சைக்கான கட்டண விவரங்களின் நிலை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியல்கள், தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மற்றும் குறைகளை முறையிடுவதற்கான அலுவலர்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கான இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி துவக்கப்பட உள்ளது.

## 2. பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கைப்பேசி செயலி :

பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எளிதில் சேவைகளை வழங்குவதற்காக அனைத்து பணிவிவரங்களை உள்ளடக்கிய கைப்பேசி செயலியினை அரசு உருவாக்கும். இந்த செயலி மூலம், பணியாளர்கள் அனைத்து வகையான விடுப்புகள், கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஊதியச்சீட்டு, வருமானவரி பிடித்தம் செய்யப்பட்டதற்கான படிவம் 16 ஆகியவற்றையும் பதிவிறக்கம் செய்யலாம். விடுப்புக்கால பயணச்சலுகை, பயணப்படி, மாறுதல் பயணப்படி போன்ற தனிப்பட்ட கோரிக்கைகளின் நிலையை கண்டறியலாம். இந்த செயலியில் மின் பணிப்பதிவேட்டினை பார்க்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும் இயலும். ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியச்சீட்டு, ஓய்வூதியம் பெறப்பட்ட விவரங்கள், படிவம் 16 ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்யலாம். மேலும், வாரிசுதாரர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்யவும் இந்தச் செயலியைப் பயன்படுத்தலாம்.



## 3. பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள பணியாளர்களுக்கு இணைய வழியில் இறுதி ஒப்பளிப்பு ஆணை வழங்கல்:

பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி திட்டங்களின் கீழ் பணிபுரிந்து ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்களுக்கு இறுதித்தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இறுதித்தொகை வழங்கும் பணிகளை இணையவழி (Online) வாயிலாக மேற்கொள்ள அரசு தகவல் தொகுப்பு மையத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளின் கணக்குத் தாட்கள் மற்றும் சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்களின் சிறப்பு பொது வருங்கால வைப்பு நிதி கணக்குத் தாட்களை தொகுத்து இணைய வழியில் பயனாளிகள் நேரடியாக அணுகும் வகையில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் மேற்கண்ட பணியாளர்கள் தங்களது கணக்குகளை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ள முடியும்.

## 4. ஆண்டு முழுவதும் ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்:

ஓய்வூதியர் நேர்காணல் என்பது கருவூல கணக்குத் துறையில் ஓய்வூதியர் உயிர்வாழ்வினை ஒவ்வோர் ஆண்டும் உறுதி செய்யும் அடிப்படை பணியாகும். தற்போது ஒவ்வொரு ஆண்டும் ஜுலை முதல் செப்டம்பர் வரை நேர்காணல் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் எளிதில் இச்சேவைகளைப் பெறும் வகையில், ஆண்டு முழுவதும் ஓய்வூதியர் நேர்காணல் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.



## 5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்ட கண்காணிப்புப் பிரிவு:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் இதர நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைத்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை திறம்பட பயன்படுத்துவதை கண்காணிக்க நிதித்துறையில் ஒரு சிறப்புப்பிரிவு அமைக்கப்படும்.

## 6. வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவின் பயன்பாட்டிற்கு வழக்கு மேலாண்மை அமைப்பினை செயல்படுத்துதல்:

அதிக அளவில் நிதிச்சுமையை ஏற்படுத்தக்கூடிய வழக்குகளை கையாளும் வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவிற்கும் இதர அலுவலர்களுக்கும் உதவும் விதமாக வழக்குகளைக் கண்டறிந்து அவற்றைத் தொடர்ந்து கண்காணிக்கும் வசதிகளுடன் 'வழக்கு மேலாண்மை அமைப்பு' ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.



## 7. விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு:

அனைத்துத் தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் மேலாண்மை செய்யும் நோக்கத்துடன், தொடக்கம் முதல் இறுதிவரை அனைத்து செயல்பாடுகளும் தானியங்கி முறையில் மாற்றியமைக்க, ஒரு விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்படும். அனைத்து தணிக்கை நடவடிக்கைகளையும் நிகழ்நேர அடிப்படையில் முழுமையாக கண்காணிக்க இந்த அமைப்பு உதவும்.

## 8. பயிற்சி மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்:

பொது தணிக்கை தரநிலைகளுக்கு ஏற்ப, ஐந்து தணிக்கை துறைகளின் தணிக்கையாளர்களுக்கு தணிக்கை தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.



## 9. இணைய பாதுகாப்பு அலகு :

அனைத்து இணைய கட்டமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், மென்பொருளை அவ்வப்போது இணைய தணிக்கை மேற்கொள்வதற்காக கருவூலத் துறையில் 'இணைய பாதுகாப்பு அலகு' ஒன்று உருவாக்கப்படும். இணையவழி இடர்பாடுகளை மதிப்பீடு செய்தல், இணையவழி தாக்குதல்களுக்கு எதிராக தரவு அமைப்புகளை வலுப்படுத்துதல், அமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பணியாளர்களுக்கு வழிகாட்டுதல்களை உருவாக்குதல் மற்றும் பல்வேறு தரப்பினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இந்த சிறப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும்.

மாநிலம் முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பெரும் ஒருங்கிணைந்த மென்பொருள் மேம்பாட்டு திட்டங்களுக்கு, தரத்திலும், தொழில்நுட்பத்திலும் தகுதிவாய்ந்த நிறுவனங்கள் வாயிலாகவே சேவைகளை கொள்முதல் செய்யப்படுவதை உறுதிசெய்யும் வகையில் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

## 10. அரசுடன் இணைந்து செயல்பட வங்கிகளின் பட்டியல்:

அரசு மற்றும் வங்கிகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்தவும், அரசுத் திட்டங்களில் வங்கிகளின் பங்கேற்பை மேம்படுத்தவும் மாநில அரசுத்துறைகள் மற்றும் முகமைகளுடன் வணிகம் செய்ய வங்கிகளின் பட்டியலை தயாரிக்க உரிய வழிகாட்டுதல்களை அரசு உருவாக்கும்.

உரிய நேரத்தில் நிதி உதவி பெறுவதை உறுதி செய்யவும், நிதி மேலாண்மையை மேம்படுத்தவும், அனைத்து துறைகள், வாரியங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் அரசு வைப்பீடுகள் மற்றும் பெறத்தக்க வரவுகளையும் உரிய வகையில் கையாளவும் பராமரிக்கவும் விதிமுறைகள் வகுக்கப்படும்.



## 11. கணக்கீட்டு வழிமுறைகளையும், செலவினங்களின் வகைப்படுத்துதலையும் ஆய்வு செய்தல் :

அரசு கணக்குகளை வெளிப்படையாக, துல்லியமாக, எளிதில் புரியும் விதமாக உரிய நேரத்தில் சட்டமன்றத்திற்கும் அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்கப் பெறும் நோக்கில், முக்கிய கணக்கு தலைப்பில் செலவினங்களின் வகைபாடுகளும், கணக்கீட்டு வழிமுறைகளும் ஆய்விற்கு மேற்கொள்ளப்படும்.

## 12. செயல்திறனை மேம்படுத்த கருவூலத் துறையை சீரமைத்தல் :

அரசு சொத்துக்களின் மேலாண்மை, இறுதி வரை நிதிப்போக்கினை கண்காணித்தல் போன்ற புதிய பணிகளை கருத்திற்கொண்டு, கருவூலத்துறையின் பொறுப்புகளை மாற்றியமைத்து, அத்துறை முழுமையாக சீரமைக்கப்படும். செயல்முறைகளை நெறிப்படுத்தி, இத்துறையின் செயல்பாட்டுத்திறன் மேம்படுத்தப்படும்.



## 13. அரசு - தனியார் பங்களிப்பு கொள்கை:

அதிக மூலதன செலவினங்கள் உள்ள திட்டங்களில், அரசு-தனியார் பங்களிப்பு முறையை பொது நிறுவனங்கள் மேற்கொள்ளவும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையினரின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், விரிவான 'அரசு- தனியார் பங்களிப்பு கொள்கை' ஒன்றை அரசு வகுக்கும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத்துறை அமைச்சர்